முருகப்பெருமான் துணை

**மகான் கலைக்கோட்டுமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.10.2022, திங்கட்கிழமை

1. பிரணவராஜனே அரங்கனே
பிரபஞ்சம் காக்கும் வண்ணம்
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
ஆசியதும் சுபகிருது தரிவை திங்கள்
அய்யாறு திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 30 ம் நாள் 17.10.2022, திங்கட்கிழமை)
3. வாரமதில் கலைக்கோட்டுமுனிவர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
வாராந்திர அரங்கன் தரிசணம்
வளமோடு நல்ல வாழ்வு தரும்
4. தருமபலம் தானபலம் அடைய
தவராஜன் திருவடி பற்றி
ஆறுமுகா என போற்றி நன்கு
அருள் தரும் தீட்சை ஏற்று
5. ஏற்று அன்னதான சேவையில்
இணைந்து மக்கள் சேவைதனை
ஆற்றல்பட செய்து வருகவே
அனைவருக்கும் சூட்சுமபலம்
6. பலம்கிட்டி உலகை மாற்றும்
பழுதில்லா மற்றவர்களையும்
வலம்வந்து அரங்கன் கொள்கை வழி
வாழ்ந்திட வழிவகை செய்யும்
7. செய்யவே நாம செப பலமுடன்
சேவை ஆற்றும் அனைவரும்
அய்யமற ஆறுமுகன் ஆசிபட
அனைத்துக் காரியமும் வெற்றி பெறுவர்
8. வெற்றிதரும் அரங்கா வாழ்க
வேலவனின் அவதார வடிவான
ஆற்றல்மிகு ஞான குருவே
அப்பனே உன்னை அறிந்து
9. அறிந்து குருவாக ஏற்று
அளவிலா தருமத்தில் உதவி
சிறந்து சேவையில் இறங்கி
சிந்தைபட கலந்த மக்களுக்கு

10. மக்களுக்கு சாப கரும வினை
மரணமும் கூட விலகியே
ஆக்கமும் ஊக்கமும் தேக்கமின்றி
அளவிலா பெருகி மாற்றம் கிட்டும்

11. கிட்டவே பிரணவக் குடில் நோக்கி
குவலயமே கவனம் திரும்ப
தட்டாது உலக மாற்றம் நிகழும்
தவராஜன் அனுகூலம் பெருகி சிறக்கும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–